Eastern University, Sri Lanka,

Faculty of Arts and Culture

Second Year/ Second Semester Examination in Bachelor of Arts & Culture

(Specialization in Economics 2015/2016) (September 2018)

ECS 2243 Labor Economics

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி 01 இலிருந்து எவையேனும் 02 வினாக்களுக்கும் பகுதி 02 இலிருந்து எவையேனும் 03 வினாக்களுக்குமாக மொத்தமாக 05 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

## பகுதி 01

(01) அ. ஊழியச் சந்தையை வரையறுக்குக.

(4 புள்ளிகள்)

ஆ. ஊழியக் கேள்விக் கோடானது கீழ்நோக்கி சரிந்து காணப்படுவதற்கான காரணங்களை குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

இ. ஊழியக் கேள்வி நெகிழ்ச்சியினை தீர்மானிக்கும் காரணிகளை குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

ஈ. ஊழியச் சந்தையில் வரி (payroll tax) விதிப்பின் தாக்கத்தை பொருத்தமான வரைபடம் மூலம் விளக்குக.

(8 புள்ளிகள்)

(02) அ. நிரம்பல் கோடானது பின்நோக்கி வளைந்து காணப்படுகின்றமைக்கான காரணத்தினை வருமான மற்றும் பதிலீட்டு விளைவினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(5 புள்ளிகள்)

ஆ. ஒரு தனிநபரது வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கான (Budget Constraint) சமன்பாட்டினை நேர மற்றும் பொருள் வரையறைகளைக் கொண்டு பெறுக.

(5 புள்ளிகள்)

இ. கூலி அல்லா வருமானம் ஒரு ஊழியனின் நேர ஒதுக்கீட்டு தீர்மானத்தில் ஏற்படுத்தும் மாற்றத்தை சுருக்கமாக விளக்குக.

(5 புள்ளிகள்)

ஈ. ஒரு ஊழியர் வேலையின்மை கால கொடுப்பனவைப் (unemployment compensation) பெற்றுக் கொண்டிருக்கும் போது ஓய்விற்கும் வருமானத்திற்கும் இடையேயான சமநிலை எவ்வாறு காணப்படும் என்பதை பொருத்தமான வரைபடம் மூலம் விளக்குக.

(5 புள்ளிகள்)

03) அ. நிறைபோட்டி மற்றும் நிறைபோட்டியல்லா ஊழியச் சந்தையில் கூலியானது எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பதை பொருத்தமான வரைபடங்கள் மூலம் ஆராய்க.

(12 புள்ளிகள்)

ஆ. தனியுரிமை ஊழியச் சந்தையில் குறைந்த பட்ச கூலி (minimum wage) விதிப்பனவின் தாக்கத்தினை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

## பகுதி- 02

04. அ. ஊழியச் சந்தையில் கூலியானது வேறுபட்டுக் காணப்படுவதற்கான காரணங்களை விளக்குக?

(10 புள்ளிகள்)

ஆ. தொழிலாளர்களும் தொழில் வழங்குனர்களும் விபத்துக்கான அபாயத்திற்கும் கூலி மட்டத்திற்கும் இடையே எவ்வாறு சமநிலை அடைகின்றார்கள் என்பதனை கெடோனிக் கோட்பாடு (Hedonic theory) எவ்வாறு விளக்குகின்றது என்பதனை பொருத்தமான வரைபடம் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

05. அ. தொழிற்சங்கம் ஒன்றில் அங்கத்துவத்தை பேணுவதில் ஊழியன் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றி விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. தொழிற்சங்கம் மற்றும் நிருவாகம் என்பவற்றிற்கிடையே இடம்பெறும் பேரம் பேசல் செயற்பாட்டு மாதிரியை (Model of Bargaining Process) விளக்குக.

(10 புள்ளிகள்)

06. ஊழியச் சந்தையில் காணப்படும் பொதுவான பிரச்சினைகள் பற்றி சமகால நிகழ்வுகளுடன் ஒப்பிட்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. இலங்கையின் ஊழியச் சந்தையின் பிரதான அம்சங்கள் மற்றும் சவால்கள் பற்றி விரிவாக ஆராய்க.

(20 புள்ளிகள்)